Deposition of witness<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 78/2025 PW-6**

Name : ஆனந்தராசன்
Father / Husband name : முத்து
Village : வெள்ளிமேடுபேட்டை
Age : 38
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 23.03.2026

A1, A2 present. Both side counsel present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 14.06.2021 அன்று மாலை 05.45 மணிக்கு திண்டிவனம் காவல நிலையத்தில் உதவி ஆய்வாளர் பணியிலிருந்தபோது அ.சா.1 சிவக்கொழுந்து, AR Police PEW Tindivanam என்பவர் நிலையம் ஆஜராகிகொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண் 787/2021 U/s 294(b),323,353,506(i) IPC ன் படி வழக்கு பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினமே 19.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் ரவி மற்றும் கேசவன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார்செய்துள்ளேன் பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். **அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ 3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கின் சம்பவ சாட்சிகளான சிவக்கொழுந்து, முருகையன், சிவக்குமார், ராமதாஸ், பாபு ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரியவர எதிரிகளை தேட எதிரிகள் அன்றையதினம்

20.30 மணிக்கு திண்டிவனம் மேம்பாலத்தின் கீழ் சென்னை பேருந்து நிறுத்தம் அருகே நின்றிருந்தவர்களை சாட்சிகள் அடையாளம் காட்ட காரணம் கூறி கைது செய்து அவர்களை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் இந்த வழக்கில் காயம்பட்ட அ.சா.1 சிவக்கொழுந்து அவர்களுக்கு மருத்துவசிகிச்சை அளித்த திண்டிவனம் அரசு மருத்துவமனைக மருத்துவர் சுரேஷ்குமார் அவர்களை விசாரித்து அ.சா.1க்கு ஏற்பட்டக்காயம் சொற்பகாயங்கள் என்று வழங்கிய காயச்சான்றிதழ் பெற்றேன். மருத்துவரின் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். **அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது U/s 294(b),323,353,506(i) IPC ன் படி 08.08.2021 அன்று இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.2, அ.சா.3 ஆகியோர்கள் என்னுடன் பணியாற்றும் போலிசார் என்றால் சரிதான். சம்பவயிடத்திலிருந்து திண்டிவனம் அரசு பொதுமருத்துவமனை சுமார் 5 கிமீ இருக்கும் என்றால் சரிதான். திண்டிவனம் அரசு பொதுமருத்துவமனையிலிருந்து காவல் நிலையத்திற்கு சுமார் 2 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். அ.சா.1 சுமார் 30 நிமிடம் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் சரிதான். அ.சா.2 அன்றையதினம் கலால் காவல் நிலையத்தில் நிலைய பாராவில் இருந்தார் என்றால் சரிதான். அ.சா.3 அன்றையதினம் கலால் காவல் நிலையத்தில் தலைமை எழுத்தராக பணியில் இருந்தார் என்றால் சரிதான். அன்றைதினம் கலால் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பளராக யார் இருந்தார் என்றால் உதவி ஆய்வாளர் நடராஜன் இருந்தார். அவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான், சம்பவ சமயத்தில் அவர் ரைடுக்கு சென்றுவிட்டார். சம்பவத்தன்று சாட்சிகள் பணியில் இருந்தற்கான ஆவணம் கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.1க்கும் எதிரிகளுக்கும் இருச்சக்கரவாகனத்தில் சென்றபோது பிரச்சனை ஏற்பட்டது

என்றால் சரிதான். சம்பவயிடமானது போக்குவரத்து நிரைந்தபகுதி தான் என்றால் சரியல்ல, அது கிராமத்திற்கு செல்லும் பகுதி. மாதிரி வரைபடத்தில் காவல் நிலையப்பகுதியில் சம்பவம் நடந்தாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், காவல் நிலையத்திலிருந்து சுமார் 100 மீ தொலைவில் சம்பவயிடம் உள்ளது. சம்பவயிடம் எந்த ரோடு என்றால் வடஆலப்பாக்கம் ரோட்டில் திரும்பு இடத்தில் சம்பவயிடம் உள்ளது. சம்பவயிடத்திற்கு அருகே குடியிருப்புகள் உள்ளது என்றால் ஒருசில குடியிருப்புகள் உள்ளது. இந்த வழக்கில் இருச்சக்கர வாகனத்தை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்து 45 நிமிடத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை நான் சரிபார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் 12வது காலத்தில் முதல்வரியில் சம்பவம் 13.06.2021 அன்று சம்பவம் நடந்ததாக உள்ளது என்றால் சரிதான், தட்டச்சு பிழை. அ.சா.1, அ.சா.2 ஆகியோர்கள் இருச்சக்கர வாகனத்தில் வட ஆலப்பாக்கம் ரோட்டில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாக சென்றதாகவும், அந்த நேரத்தில் அந்த வழியாக சென்ற எதிரி ராஜேந்திரன் இருச்சக்கர வாகனத்தில் அ.சா.1, அ.சா.2 சென்ற வாகனம் மோதியதால் ராஜேந்திரன் காயம் அடைந்ததாலும், அதன் காரணமாக ஏற்பட்ட வாக்குவாதத்தால் அ.சா.1, அ.சா.2 ன் மீது எந்த வழக்கும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக எதிரிகள் மீது அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரின்பேரில் பொய்யான வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை, எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.